# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க,
# வணிகக் கப்பற்றொழில் (திருத்தச்) சட்டம்

---

*[1988 ஒக்ரோபர் மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

---

*1988 ஒற்ரோபர் மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 — தபாற் செலவு : சதம் 75

*1988 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (திருத்தச்) சட்டம்*

*[1986, ஒக்ரோபர் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**ச.வ.—ஓ. 6/88**

**1926**

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் 123 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகமும் பிரிவுகளும் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IIIஅ எனவும் அத்துடன் பிரிவுகள் 123அ, 123ஆ, 123இ 123ஈ, 123உ, 123ஊ, 123எ, 123ஏ, 123ஐ, 123ஒ எனவும் பயனுறுதலும் வேண்டும் :— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தில் IIIஅ என்னும் புதிய பாகத்தையும் 123அ தொடக்கம் 123ஒ வரையிலான பிரிவுகளையும் உட்புகுத்தல்.

'பாகம் IIIஅ—இணைநிலைப் பதிவு

123அ. இந்தப் பாகத்தில்—

ஒரு கப்பல் தொடர்பாக அதன் ஓரினச் சொல்லமைப்புகளுடன் "வெறுங் கப்பல் வாடகைக்கெடுத்தல்" என்பது, உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு வாடகைக்கெடுப்பவர், இவ்வாடகைக் கெடுத்தலின் பயனைகொண்டு கப்பல் தலைவரையும், கப்பலோட்டிகள் குழுவையும் நியமிக்கும் அத்துடன் பதவி நீக்கும் உரிமையுடனும் அவரே கப்பலின் சொந்தக்காரர் என்றாற்போல் மூன்றும் திறத்தவர்கள் தொடர்பில் தாமே பொறுப்புள்ளவராகவிருக்கும் உரிமையுடனும், ஆனால் கப்பலை விற்கும் அல்லது ஈடு வைக்கும் உரிமை இல்லாது, கப்பலின் முழுக் கட்டுப்பாடு, முகாமை, தொழிற்பாடு அத்துடன் உடைமை என்பவற்றைப் பெறுகின்ற வாடகைக்கெடுத்தல் என்று பொருளாகும் ;

"வெளிநாட்டு இடாப்பு" என்பது கடற்செலவில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு விவரணத்தினவையுமான அதன் கப்பல்களை அல்லது கலன்களைப் பதிவு செய்யும் நோக்கத்திற்காக வெளிநாடொன்றில் வைத்திருக்கப்படும் ஓர் இடாப்பு என்று பொருளாகும் ; அத்துடன்

"இணைநிலைப் பதிவு" என்பது, வெளிநாட்டு இடாப்பொன்றில் தொடர்ந்து பதிவுசெய்யப்படும் ஒரு கப்பலின் குறித்தவொரு காலப்பகுதிக்கான பதிவுப் புத்தகத்தின் இணைநிலைப் பதிவுப் பிரிவில் உள்ள பதிவு என்று பொருளாகும்.

இந்தப்பாகம் இணைநிலைப் பதிவுக்கு ஏற்புடையதாதல்.

123ஆ. இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், இப்பாகத்தின் ஏற்பாடுகள், வெளிநாட்டு இடாப்பொன்றில் பதிவுசெய்யப்பட்டுள்ள கப்பல்களினதும் அத்துடன் இடாப்புப் புத்தகத்தின் இணைநிலைப் பதிவுப் பிரிவில் பதிவுசெய்யப்பட்டுள்ள கப்பல்களினதும் இணைநிலைப் பதிவுக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

கப்பல்களின் இணைநிலைப் பதிவு.

123இ. (1) வெளிநாட்டு இடாப்பொன்றில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு கப்பலின் இணைநிலைப் பதிவானது, இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, 30 ஆம் பிரிவின்கீழ் இலங்கைக் கப்பலொன்றைச் சொந்தமாகக் கொண்டிருப்பதற்கு தகைமைபெற்ற இயற்கை ஆள் ஒருவரால் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவினால் அத்தகைய கப்பல் வெறுங் கப்பல் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தால், வெறுங்கப்பல் வாடகைக் காலப் பகுதிக்கு அனுமதிக்கப்படலாம்.

(2) இடாப்புப் புத்தகத்தின் இணைநிலைப்பதிவு பிரிவில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் கப்பல், கப்பலின் இணைநிலைப்பதிவு இடாப்புப் புத்தகத்தில் தொடர்ந்திருக்கும்வரையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாயிருத்தல் வேண்டும்.

பதிவுக்கான தேவைப்பாடுகள்.

123ஈ. (1) ஏதேனும் வெளிநாட்டுக் கப்பல்—

(அ) அக்கப்பல் எந்த நாட்டில் பதிவுசெய்யப்பட்டதோ அந்த நாட்டின் சட்டம் இணைநிலைப் பதிவை அனுமதித்தாலொழிய ;

(ஆ) கப்பலின் கைமாற்றங்கள் அல்லது அனுப்புகைகள், அத்துடன் அக்கப்பலின்மீதான ஈடுகள் அல்லது வேறு வில்லங்கங்கள் என்பவற்றின் உருவாக்கம், பதிவு அல்லது விடுவிப்பு என்பனபற்றியவை தவிர, அந்த நாட்டின் பதிவகத்தில் அக்கப்பலின் பதிவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தாலொழிய ;

(இ) கப்பற் சொந்தக்காரரும் கப்பலின் பதிவுசெய்யப்பட்ட ஈடுபெறுநர்களும் இணைநிலைப் பதிவுக்கு இணங்கினாலொழிய,

இடாப்புப் புத்தகத்தின் இணைநிலைப்பதிவுப் பிரிவில் பதிவுசெய்யப்படலாகாது.

(2) இடாப்புப் புத்தகத்தின் இணைநிலைப்பதிவுப் பிரிவில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒரு கப்பலின் வெறுங் கப்பல் வாடகைக்கெடுப்பவர் ஒவ்வொருவரும், வெளி

நாட்டு இடாப்பொன்றில் பதிவுசெய்யப்பட்டுள்ள அக் கப்பலின் கைமாற்றங்கள் அல்லது அனுப்புகைகள், அத்துடன் அக்கப்பலின்மீதான ஈடுகள் அல்லது வேறு வில்லங்கங்கள் என்பனவற்றின் உருவாக்கம் பதிவு அல்லது விடுவிப்பு என்பன தொடர்பான எவையேனும் புறக்குறிப்புகளைப் பதிவாளருக்கு அறிவிக்கலாம் என்பதுடன், பதிவாளர், தகவல் நோக்கங்களுக்காக, அத்தகைய புறக்குறிப்புகளை இடாப்புப் புத்தகத்தின் இணைநிலைப்பதிவுப் பிரிவில் பதிந்துகொள்ளுதலும் வேண்டும்.

இணைநிலைப் பதிவுக்கான நடவடிக்கை முறை.

123உ. (1) இலங்கைக் கப்பலொன்றைச் சொந்தமாகக் கொண்டிருக்கத் தகைமைபெற்ற, வெளிநாட்டுக் கப்பலொன்றை வெறுங் கப்பல் வாடகைக்கெடுப்பவர் எவரும், கப்பலின் இணை நிலைப் பதிவுக்குப் பதிவாளருக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், பதிவாளரானவர், அத்தகைய பதிவுக்கான தேவைப்பாடுகளும் நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன என அவர் திருப்திப்பட்டால், அத்தகைய வாடகைக்கொடுப்பவரால் அத்தகைய கப்பல் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள காலப்பகுதிக்கு இடாப்புப் புத்தகத்தின் இணைநிலைப் பதிவுப் பிரிவில் கப்பலைப் பதிவுசெய்தலும் வேண்டும்.

(2) இடாப்பின் இணைநிலைப் பதிவுப் பிரிவில் ஒரு கப்பலைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்துடன் பின்வருவனவும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்:—

(அ) அத்தகைய ஒரு கப்பல் பதிவுசெய்யப்பட்டுள்ள நாட்டின் தோதான கடல்சார் அதிகாரிகளிடமிருந்து, அந்த நாட்டின் சட்டம் கப்பல்களின் இணைநிலைப் பதிவை அனுமதிக்கிறதென்றும், அந்த நாட்டில் அக்கப்பலின் பதிவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதென்றும் ஓர் உறுதிப்படுத்தற் கடிதம்;

(ஆ) அத்தகைய அதிகாரிகளால் வழங்கப்பட்ட அக் கப்பலின் சொத்தாண்மை அத்துடன் அக் கப்பலின்மீதான ஈடுகள் அல்லது வேறு வில்லங்கங்கள் என்பனபற்றிய ஓர் உறுதிப்படுத்தற் கடிதம்;

(இ) இணைநிலைப்பதிவிற்கு அக்கப்பலின் பதிவுசெய்யப்பட்ட ஈடுபெறுநர்களின் எழுத்து மூலமான சம்மதம்;

(ஈ) இணைநிலைப்பதிவிற்குக் கப்பற் சொந்தக்காரரின் எழுத்துமூலமான சம்மதம்;

(உ) எந்த வாடகை ஒப்பந்தத்தின்கீழ் விண்ணப்பகாரருக்குக் கப்பலானது வெறுங்கப்பல்

வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளதோ அந்த வாடகை ஒப்பந்தத்தின் ஒரு பிரதி.

(3) ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் விதித்துரைக் கப்பட்ட கட்டணம் சேர்த்தனுப்பப்பட்டிருத்தல் வேண்டும். எக்காலப் பகுதிக்கென விண்ணப்பிக்கப்படு கின்றதோ அந்த முழுக் காலப்பகுதி தொடர்பிலும் கட் டணங்கள் முற்பணமாகக் கொடுக்கப்படல் வேண்டும். எக்காலப்பகுதி தொடர்பில் அத்தகைய கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளனவோ அக்காலப்பகுதி முடிவுறும் தேதிக்கு முன்னதான ஒரு தேதியில் இணைநிலைப்பதிவு இல்லாதாக்கப்படுமிடத்து, முற்பணமாகக் கொடுக்கப் பட்ட கட்டணங்களில் எப்பகுதியும் மீளளிக்கப்படலா காது.

(4) இணைநிலைப்பதிவு நோக்கங்களுக்காகக் கப்பலின் தொன்னளவின் புதிய அளவீடு ஒன்று தேவைப்படுத் தப்படலாகாது. 38 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப் பட்ட அளவீட்டுச்சான்றிதழும் அத்துடன் தொன்னள வுச் சான்றிதழும், வெளிநாட்டு இடாப்பில் உள்ள நேரொத்த ஆவணங்களின் அடிப்படையில் வழங்கப்படு தல் வேண்டும் என்பதுடன், இலங்கையில் கொடுக்கும் படி தேவைப்படுத்தப்படும் அளவீட்டுக் கட்டணங்கள் அவற்றின் வழங்குகைக்கெனச் செலுத்தப்படுதலும் வேண்டும். கப்பலின் தொன்னளவை அல்லது விவா ணத்தைப் பாதிக்கின்ற கப்பலின் அடுத்துப் பின்ன ரான மாற்றம், இடாப்புப் புத்தகத்தில் பதிவுசெய்யப் பட்ட கப்பல்கள் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு இணங்கப் பயனுறுத்தப்படுதல் வேண்டும் என் பதுடன், கப்பல் எந்நாட்டில் பதிவுசெய்யப்பட்டுள் ளதோ அந்நாட்டின் தோதான கடல்சார் அதிகாரி களுக்குப் பதிவாளரினால் அறிவிக்கப்படலும் வேண்டும்.

(5) வெறுங்கப்பல் வாடகைக்கெடுப்பவர், கப்பல் எந் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்நாட்டிலுள்ள தோதான கடல்சார் அதிகாரிகளினதும், கப்பற் சொந் தக்காரரினதும், ஈடுபெறுநரினதும் சம்மதத்துடன், இடாப்புப்புத்தகத்தின் இணைநிலைப் பதிவுப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு கப்பலின் பெயரை மாற் றும்படி பதிவாளருக்கு விண்ணப்பிக்கலாம் என்பது டன், அத்தகைய மாற்றம், இடாப்புப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள கப்பல்கள் தொடர்பான இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பயனுறுத்தப்படு தலும் வேண்டும். பதிவாளர், கப்பல் எந்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்நாட்டின் தோதான கடல் சார் அதிகாரிகளுக்குப் பெயர்மாற்றத்தை அறிவிக்க வேண்டும்.

(6) இணைநிலைப்பதிவு பூர்த்திசெய்யப்பட்டதன்மேல் பதிவாளர், ஓர் இலங்கைக் கப்பலின் பதிவினது விடயத்தில் பதிவுசெய்யப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்ற அதே விபரங்களைக் கொண்டிருப்பதுவும், 47 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை ஒத்த படிவமொன்றிலானதுமான ஓர் இணைநிலைப் பதிவுச் சான்றிதழையும் அத்துடன் கப்பற் சொந்தக்காரரினதும், வெறுங் கப்பல் வாடகைக்கெடுப்பவரினதும், வெளிநாட்டு இடாப்பினதும் விபரங்களையும் வழங்க வேண்டும். இணைநிலைப் பதிவுச்சான்றிதழின் பிரதியொன்றைக் கப்பல் எந்த நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த நாட்டின் தோதான கடல்சார் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுதலைப் பதிவாளர் செய்வித்தல் வேண்டும்.

(7) பதிவாளர் இணைநிலைப் பதிவுச் சான்றிதழில் அதன் செல்லுபடியாந்தன்மை முடிவுறும் தேதியைக் குறிக்க வேண்டும்.

(8) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் விதித்துரைக்கப்படக்கூடியனவான அத்தகைய நிபந்தனைகளுக்கும் அமைய பதிவாளர், இணைநிலைப் பதிவுச் சான்றிதழின் செல்லுபடியாந்தன்மைக் காலப்பகுதியை நீடிக்கலாம்.

கப்பலில் இலங்கைக் கொடியைப் பறக்க விடல்.

123ஊ. (1) ஏதேனும் வெளிநாட்டுக் கப்பல் தொடர்பில் இப்பாகத்தின்கீழான இணைநிலைப்பதிவு அந்தஸ்து வலுவிலிருக்கும் காலப்பகுதியின்போது, கப்பலானது இலங்கைக் கொடியைப் பறக்கவிட வேண்டுமேயல்லாது வேறேதேனும் வெளிநாட்டின் கொடியைப் பறக்கவிடலாகாது.

(2) கப்பலெதுவும், அக்கப்பல் தொடர்பில் இப்பாகத்தின் கீழான இணைநிலைப்பதிவு முடிவுற்றபின் அல்லது இல்லாதாக்கப்பட்டபின் இலங்கைக் கொடியைப் பறக்கவிடலாகாது.

(3) ஓராம் உட்பிரிவிற்கு அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கு முரணாகக் கப்பலொன்று பயன்படுத்தப்படுமிடத்து, கப்பல் வாடகைக்கெடுப்பவர், கப்பற்றலைவர், அத்துடன் கப்பலுக்குப் பொறுப்பானவராயிருக்கும் ஆள் ஆகிய ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அதற்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

இணைநிலைப் பதிவு விடயத்தில் ஈடுகள்.

123எ. (1) பாகம் III இன் 4 ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக எது எப்படியிருப்பினும், அத்தகைய இணைநிலைப்பதிவு செய்யப்பட்ட நோத்தில் இடாப்புப் புத்தகத்தின் இணைநிலைப் பதிவுப் பிரிவில்

பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு கப்பலின் மீதான பொறுப் பாகவிருக்கும் ஏதேனும் ஈடு அல்லது வில்லங்கம் தொடர்ந்தும் உளதாயிருத்தல் வேண்டுமென்பதுடன், கப்பலின் மீதான ஒரு பொறுப்பாயிருத்தலும் வேண் டும் ; அத்துடன் அது உருவாக்கப்பட்ட நேரத்தில் அது எந்தச் சட்டத்திஞல் ஆளப்பட்டதோ அந்தச் சட்டத் தால் ஆளப்படுதலும் வேண்டும். அத்துடன் இடாப்புப் புத்தகத்தின் இணை நிலைப்பதிவுப் பிரிவில் கப்பலானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற நிகழ்விஞல் அது பாதிக்கப்படுதலுமாகாது.

(2) இடாப்புப் புத்தகத்தின் இணை நிலைப் பதிவுப் பிரி வில் கப்பலொன்று இணை நிலைப் பதிவு செய்யப்பட்ட பின், கப்பலின் மீதான ஓர் ஈடு அல்லது வேறு வில்லங் கம், கப்பல் எந்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்நாட்டின் சட்டத்திற்கு இணங்கக் கப்பற் சொந்தக் காரரால் மட்டுமே உருவாக்கப்படல் வேண்டும் என்ப துடன், அந்நாட்டிலுள்ள தோதான கடல்சார் அதிகாரி களால் பதிவுசெய்யப்படலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் பாகம் III இன் 4 ஆம் அத்தி யாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இடாப்புப் புத்த கத்தின் இணை நிலைப் பதிவுப் பிரிவில் பதிவு செய்யப் பட்டுள்ள ஒரு கப்பல் தொடர்பில் இடாப்புப் புத்தகத் தில் ஓர் ஈட்டைப் பதிவு செய்தலானது அனுமதிக்கப் படலாகாது.

(4) தகவல் நோக்கங்களுக்காக, (1) ஆம் (2) ஆம் பிரிவுகளிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஈடுகளும் வேறு வில்லங்கங்களும் இடாப்புப் புத்தகத்தின் இணை நிலைப் பதிவுப் பிரிவில் பதியப்படல் வேண்டும்.

**பதிவை இல்லா தாக்குதல்.**

123ஏ. (1) பின்வரும் சந்தர்ப்பங்களில், இடாப்பின் இணை நிலைப்பதிவுப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு கப்பலின் இணை நிலைப் பதிவை இல்லாதாக்குவதற் குப் பதிவாளருக்குத் தத்துவம் இருத்தல் வேண்டும் :—

(அ) இடாப்புப் புத்தகத்தின் இணை நிலைப் பதிவுப் பிரிவில் எக்காலப் பகுதிக்கு அது அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளதோ அக்காலப் பகுதி முடிவதன்மேல் ;

(ஆ) வெறுங் கப்பல் வாடகைக்கெடுப்பவராகப் பதிவு செய்யப்பட்ட ஆள், ஓர் இலங்கைக் கப்பலைச் சொந்தமாக வைத்திருக்கத் தகைமை பெற்ற வராக இல்லாதொழிவதன்மேல் ;

(இ) அப்பல் தொடர்பில் வெறுங் கப்பல் வாடகைக் கெடுப்பு முடிவுறுவதன்மேல் ;

(ஈ) இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டிற்கு இணங்கியொழுக வெறுங் கப்பல் வாடகைக்கெடுப்பவர் தவறினல்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஒரு கப்பலின் இணை நிலைப் பதிவு இல்லாதாக்கப்படுவதன்மேல், கப்பற்றலைவர் கப்பல் தொடர்பிலான இணை நிலைப்பதிவுச் சான்றிதழைப் பதிவாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) நியாயமான காரணம் இல்லாமல் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் எவரேனும் கப்பல் வாடகைக்கெடுப்பவர், அல்லது கப்பற்றலைவர் ஒரு தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், அதற்கெனக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

**பிரிவு 116 அல்லது பிரிவு 118 ஏற்புடையதாதலாகாது.**

123ஓ. பிரிவு 116 அல்லது பிரிவு 118 இல் உள்ள எதுவும் இடாப்புப் புத்தகத்தின் இணை நிலைப் பதிவுப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு கப்பலுக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

**ஒழுங்கு விதிகள்.**

123ஔ. (1) இப்பாகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம்.

(2) குறிப்பாக, ஆனல் மேற்போந்த தத்துவத்தின் பொதுமைக்குப் பங்கமில்லாமல், அத்தகைய ஒழுங்கு விதிகள் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றிற்கும் அல்லது அவற்றில் எவற்றுக்கும் ஏற்பாடு செய்யலாம்:—

(அ) இப்பாகத்தால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் ஆவணம் தயாரிக்கப்படவேண்டிய படிவமும் அது கொண்டிருக்கவேண்டிய விபரங்களும்;

(ஆ) இணை நிலைப் பதிவிற்கான நடவடிக்கைமுறை;

(இ) இணை நிலைப் பதிவிற்கான விண்ணப்பம் செய்யப்படவேண்டிய முறையும் படிவமும்;

(ஈ) விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை உறுதிப்படுத்த வேண்டிய ஆட்கள்;

(உ) இப்பாகத்தின் கீழ் விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள், வருமதிகள் அத்துடன் இறுப்பனவு என்பனவும், அத்தகைய கட்டணங்கள், வருமதிகள் அத்துடன் இறுப்பனவு என்பன சேகரிக்கப்படவேண்டிய முறையும்;

(ஊ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் விதித்துரைக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் வேறு ஏதேனும் கருமம்.